# அமைதியான சாதனையாளர் - முதல்வர்!

**திரு**.மு.க.ஸ்டாலின் அவர்களை 1999 ஆம் ஆண்டு முதல் நான் நன்கறிவேன். அவர் அப்போது சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தார். நான் 1999 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் முதலமைச்சரின் செயலகத்தில் கலைஞர் அவர்களின் கீழ் சிறப்புச் செயலாளராகவும், பின்னர் செயலாளராகவும் பணிபுரிந்தேன்.

திரு.ஸ்டாலின் அவர்கள், தொடக்கத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை (RD&LA) அமைச்சராகவும், அதனைத் தொடர்ந்து, துணை முதல்வராகவும் செயலாற்றிய ஐந்தாண்டு காலத்தில் (2006 - 11), அவருடன் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளேன். அந்த ஐந்தாண்டுகளில், நான் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளராகவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளேன்.

அந்த வகையில், திரு.ஸ்டாலின் அவர்கள் ஒரு மனிதர், ஒரு நிர்வாகி மற்றும் ஒரு அரசியல் தலைவராக எப்படிச் செயல்பட்டார் என்பதை நன்கறிந்து கொண்டேன்.

பல ஆண்டுகளாக, நான் பல்வேறு தலைவர்களையும், அவர்தம் தலைமைத்துவ பாணிகளையும் கண்டிருக்கிறேன். எவ்விதமான குணங்கள், பண்புகள் ஒருவரைத் திறமையான தலைவராக மாற்றுகின்றன என எளிதில் கூறமுடியாது. ஏனெனில், ஒரு தலைவரின் வெற்றி என்பது பெரும்பாலும் அவர் கடந்து வரும் சூழலைப் பொறுத்தே அமைகிறது. உண்மையில், ஒருவர் திறமையான தலைவராகத் திகழ்கிறாரா இல்லையா என்பதை அவரது பண்புகள் மட்டுமின்றி, அவருடைய சாதனைகளும் சேர்ந்தே தீர்மானிக்கின்றன. எனவே, திரு. ஸ்டாலின் அவர்களின் தலைமைப்பாங்கினை அவருடைய பண்புகள் மற்றும் சாதனைகளின் அடிப்படையில் ஆய்வு செய்ய விழைகிறேன்.

உணர்வுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் உணர்வுசார் நுண்ணறிவு திரு. ஸ்டாலின் அவர்களின் தலைசிறந்த பண்புகளுள் தலையான பண்பாகும். எப்பொழுதும் மிகக் கவனமாக சிந்தித்து, நிதானமாக பேசக்கூடியதும், முதிர்ச்சியற்ற அல்லது தேவையற்ற சர்ச்சைக்குரிய கருத்துக்களை ஒருபொழுதும் தெரிவிக்காததுமான ஒரு முதிர்ந்த அரசியல்வாதியாகவே நான் அவரைக் கண்டுள்ளேன். எவ்விடத்திலும் உரையாற்றுவதற்கு அல்லது அறிக்கை வெளியிடுவதற்கு முன்னர், அந்த உரையில் அல்லது அறிக்கையில் இடம்பெற்றுள்ள தகவல்களையும் எண்களையும் முற்றிலும் சரிபார்த்துக் கொள்வார். தனது அனைத்து செயல்பாடுகளிலும் அதே அளவிலான கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் இருந்துள்ளார். எவ்வளவு அழுத்தமான சூழலிலும் நிதானமாகச் செயல்படக் கூடியவராகவும், ஆத்திரமூட்டக்கூடிய கடுமையான சூழலை எதிர்கொண்டாலும் சற்றும் கலங்காதவராகவும் எப்பொழுதும் அமைதியாகவும், பொறுமை வாய்ந்த மனிதராகவும் அவர் இருப்பதை நான் கண்டுள்ளேன். அவரது தோற்றத்திலிருந்து அவர் என்ன நினைக்கிறார் என்பதை நீங்கள் ஒரு போதும் அறிந்து கொள்ள இயலாது! இது, அவர் தனது தந்தையிடமிருந்து பெற்ற ஒரு தனித்துவமான பண்பாகும்! தந்தை மகன் இருவரும் சிறந்த போக்கர் (ஒரு வகை விளையாட்டு) வீரர்களாக இருந்திருக்கலாம்!

**திரு.ஸ்டாலின் அவர்களின் இரண்டாவது தனித்துவமான பண்பினை முன்னாள் அமெரிக்க அதிபர் திரு.தியோடர் ரூஸ் வெல்ட்டின் கீழ்க்கண்ட மேற்கோளில் காணலாம். "தான் செய்ய விரும்பும் பணியைத் திறம்படச் செய்யக்கூடிய மனிதர்களைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் பெற்றவராகவும், அப்பணியை அவர்கள் செய்யும் போது தலையிடாமல் விலகியிருந்து கண்காணிப்பவராக இருப்பவர் மட்டுமே தலைசிறந்த தலைவர் ஆவார்." அனைத்தும் தனக்கு தெரியும் என்று நினைக்கும், தனது சொந்தக் கருத்துக்களை மட்டுமே கேட்க விரும்பும், தனக்குக் கீழ் பணிபுரிபவர்களிடமிருந்து ஆலோசனை கேளாமலும், சரியான முடிவுகளை எடுப்பதற்கு அவர்களை நம்பாமலும், தன்னை விட அறிவில் சிறந்தவர்களைத் தன் அருகில் அனுமதிக்காத ஒரு நபர் திறமைமிக்கவராக இருந்தாலும், அரிதாகவே ஒரு சிறந்த தலைவராக இருப்பாரென தலைமைத்துவப் பண்பு குறித்த ஆய்வுகள் மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கின்றன. வெற்றிகரமான தலைவர்கள் எப்படிப்பட்டவர்கள்? பொதுவாக அதிகம் பேச மாட்டார்கள்; பிறர் கூறுவதைச் செவிமடுத்துக் கேட்பார்கள்; பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வார்கள்; தம் கீழ் பணிபுரிபவர்களுக்கு முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரத்தையும், போதிய வாய்ப்புகளையும் வழங்குவார்கள்; தன்னைச் சுற்றி மதிநுட்பம் மிக்கவர்கள் இருக்க வேண்டுமென்று நினைப்பார்கள். இதுவே திரு.ஸ்டாலின் அவர்களின் தலைமைத்துவ பாணி என்றும் அரசுப் பணியாளர்களிடையே அவர் பிரபலமாக இருப்பதற்கான காரணம் என்றும் கூறினால் அது மிகையாகாது.**



2006 ஆம் ஆண்டு பாப்பாபட்டி, கீரிப்பட்டி உள்ளிட்ட இடங்களில் வெற்றிகரமாக தேர்தல் நடத்தியதை பாராட்டி நடைபெற்ற சமத்துவப் பெருவிழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் மற்றும் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றனர். இக்கட்டுரையாளர் அசோக் வர்தன் ஷெட்டி ஐ.ஏ.எஸ். படத்தில் உள்ளார்.

திரு.ஸ்டாலின் அவர்களிடம் காணப்படும் மூன்றாவது தனித்துவமான பண்பு என்னவென்றால், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அரசியல் தலைவர்களால் ஏற்படும் அழுத்தங்களை நெஞ்சுறுதியுடன் எதிர்கொண்டு, முக்கியமான தருணங்களில் சரியான நிர்வாக முடிவுகளை எடுக்கும் திறனே ஆகும். 2006ஆம் ஆண்டில், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் ஒருவர், விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக (தேர்தல்கள்) நியமிக்கப்பட்டார். ஆனால், ஒரு மாதத்திற்கும் மேலாகப் பணி நியமன ஆணையை மீறி, பணியில் சேரவில்லை. இத்தகைய ஒழுங்கீனச் செயலினால் நான் பொறுமையிழந்து, அவரைப் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யுமாறு திரு.ஸ்டாலின் அவர்களிடம் ஒரு கருத்துருவை அளித்தேன். என்னுடைய பரிந்துரை உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த அலுவலர், திரு.ஸ்டாலின் அவர்களின் மனைவியின் நெருங்கிய உறவினர் என்பதும், அதன் காரணமாகவே அவரை யாரும் எதுவும் செய்துவிட முடியாது என்ற தவறான நம்பிக்கையால் அவர் அரசு உத்தரவை மீறி நடந்துள்ளார் என்பதும் எனக்குப் பின்னர்தான் தெரியவந்தது. மற்றொரு நிகழ்வில், திரு.ஸ்டாலின் அவர்களுக்கு மிகவும் நெருக்கமான, அதிகாரமிக்க தி.மு.க. அமைச்சர் ஒருவரின் உறவினரான ஊரக வளர்ச்சித் துறையின் ஒரு இணை இயக்குநர், ஊழல் குற்றச்சாட்டு காரணமாகப் பணியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார். அமைச்சர் மன்றாடிக் கேட்ட பின்பும், இதுபோன்ற ஊழல் வழக்குகளில் பணியிடைநீக்கம் செய்வது மட்டுமே ஒரே வழி என்ற எனது நிலைப்பாட்டை திரு.ஸ்டாலின் அவர்கள் ஏற்றுக்கொண்டார். திரு ஸ்டாலின் அவர்கள் மிகச் சரியான முடிவுகளை எடுத்ததாலும், அவரது பொறுப்பில் உள்ள துறைகளில் தவறுகளுக்கு இடமளிக்காத தாலும்தான், 2011 ஆம் ஆண்டில் ஆளும் அரசு மாறிய பின்னர், ஒரு ஊழல் வழக்கிலோ அல்லது வேறு ஏதேனும் ஒரு வழக்கிலோ அவரைச் சிக்க வைப்பதற்கு எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைந்தன.

1991ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 25 ஆண்டுகளாக, குறிப்பாக செல்வி ஜெ.ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில், அ.இ.அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. கட்சிகளுக்கு இடையே தீங்கு நேரும் வகையில் தமிழ்நாட்டின் அரசியல் பிளவுபட்டிருந்தது. அற்பத்தனமான கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர் என்பது தான் திரு.ஸ்டாலின் அவர்களின் நான்காவது தனித்துவமான பண்பாகும். அ.தி.மு.க. ஆட்சியில் முக்கியப் பதவி வகித்த காரணத்திற்காக மட்டுமே, அரசு அதிகாரிகளை அவர் ஒருபோதும் பழிவாங்கவோ, புறந்தள்ளவோ இல்லை. 2006ஆம் ஆண்டு, தி.மு.க. கட்சியின் கோவை மாவட்டச் செயலாளரின் பரிந்துரையையும் மீறி, திரு.ஸ்டாலின் அவர்கள் ஓடந்துறை கிராம ஊராட்சிக்குச் சென்று, அந்த ஊராட்சியின் தலைவர் (அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த) திரு ஆர்.சண்முகம் அங்கு பாராட்டத்தக்கப் பணிகளைச் செய்திருந்ததால் அவருக்குச் சிறந்த ஊராட்சித் தலைவருக்கான விருதினை வழங்கிப் பாராட்டினார். விருதுகள் வழங்குதல், திட்ட நிதிகளை ஒதுக்கீடு செய்தல், பயனாளிகளைத் தெரிவு செய்தல் போன்ற பொருண்மைகளில் கட்சி சார்ந்த அரசியலைப் புறந்தள்ளிவிட்டு, தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் மட்டுமே திரு.ஸ்டாலின் அவர்கள் செயலாற்றினார். அவர் எப்போதும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடனும், தனிப்பட்ட முறையில் நல்லுறவைப் பேணி வருகிறார்.

**திரு.ஸ்டாலின் 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறையின் அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் இருந்தபோது, அவர்களின் சாதனை குறித்து நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன். எனது மதிப்பீட்டின்படி, அவர் மிகச் சிறப்பாகச் செயல்பட்டார். ஆனால், அவரது செயல்பாட்டிற்கு ஈடான பாராட்டு அவருக்குக் கிடைக்க வில்லை. அவரது சீரிய செயல்பாடுகள் சிலவற்றின் சிறப்பம்சங்கள் இங்கு சுட்டிக் காண்பிக்கப்படுகின்றன:**

- திரு.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு அதிகாரமளித்தல் மற்றும் வறுமை ஒழிப்பு சம்பந்தமான "வாழ்ந்து காட்டுவோம்" திட்டம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இத்திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களில், ஊரக வளர்ச்சித் துறை மட்டுமல்லாது அனைத்துத் துறை சார்ந்த திட்டங்களிலும், இந்தியாவில் மட்டுமல்லாது உலக அளவில் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களிலும், திட்ட வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தலில் மிகச் சிறந்த திட்டம் என மதிப்பிடப்பட்டது.
- தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் (SHGs) திட்டம் அவருடைய ஆட்சிக் காலத்தில் மாபெரும் வளர்ச்சியைக் கண்டது. 1989ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையில், ஆண்டுக்குச் சுமார் ரூ.110 கோடியாக இருந்த, சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் சராசரி வங்கிக் கடன் தொகையானது, 2006 - 2011ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ பதினைந்து மடங்கு அதிகரித்து, ஆண்டுக்கு ரூ.1600 கோடியாக உயர்ந்தது.
- அவருடைய பதவிக் காலத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் (MGNREGS) வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. அதற்காக, 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றம் தனது பாராட்டினைத் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டை முன்மாதிரியாகக் கொண்டு செயல்படுமாறு பிற மாநிலங்களையும் வலியுறுத்தியது. 2006-11 காலகட்டத்தில் இந்தத் திட்டத்திற்காகத் தமிழ்நாடு அதிக எண்ணிகையிலான விருதுகளையும் வென்றது.
- 2011ஆம் ஆண்டு மார்ச் மாதவாக்கில், தமிழ்நாட்டின் 12,618 கிராம ஊராட்சிகளிலும் ஒரு நூலகம், ஒரு கிராமப்புற விளையாட்டுத் திடல், ஒரு மழைநீர் சேகரிப்பு அமைப்பு மற்றும் தகனக் கொட்டகையுடன் கூடிய ஒரு இடுகாடு ஆகியவற்றைக் கொண்ட இந்தியாவின் முதல் மற்றும் ஒரே மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றியமைத்ததில் திரு ஸ்டாலின் முக்கியப் பங்கு வகித்தார். கிராமப்புறங்களில் அனைத்து இன்றியமையாத வசதிகளையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" (AGAMT) என்ற மாநிலப் பெருந்திட்டத்தின் கீழ் இவற்றிற்கு வகை செய்யப்பட்டன.
- பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டகாச்சியேந்தல் ஆகிய கிராம ஊராட்சிகளில், ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதில் தீர்க்க இயலாத சிக்கல்கள் நிலவின. அவற்றைத் திரு. ஸ்டாலின் 2006ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தார். இக்கிராமங்களில் கிராம ஊராட்சித் தலைவர் பொறுப்புகள் பட்டியல் வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டதால், பத்து ஆண்டுகள் வரை தேர்தல்களை நடத்த சாதி இந்துக்கள் அனுமதிக்கவில்லை. இதனால் இந்த நான்கு கிராம ஊராட்சிகளுக்குத் தேசிய அளவில் மிகப் பெரிய அவப்பெயர் ஏற்பட்டது.
- தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் மண் சுவராலும், ஓலைக் கூரையாலும் கட்டப்பட்ட 22 லட்சம் குடிசைகள் இருந்தன. இவற்றை 6 ஆண்டுகளில் RCC சிமெண்ட் வீடுகளாக மாற்றுவதற்கான ஒரு லட்சியத் திட்டமான "கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தை (KVVT)" 2010ஆம் ஆண்டு தொடங்கி வைத்ததில் திரு.ஸ்டாலின் அவர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. இத்திட்டத்தின் மூலம் 2010 - 2011 ஆம் ஆண்டில் சுமார் 4 லட்சம் குடிசைவாழ் மக்கள் பயனடைந்தனர். ஆனால், 2011 ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, இத்திட்டம் கைவிடப்பட்டது. 2024ஆம் ஆண்டு முதல் "கலைஞர் கனவு இல்லம்" என்ற பெயரில் இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு, இந்தியாவிலேயே மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகும். அதன் மக்கள்தொகையில் சரிபாதி மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். விரைவான நகரமயமாதலின் சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு, முக்கியமான, ஆனால் நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்ட பணியான மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் எல்லை விரிவாக்கப் பணியை திரு.ஸ்டாலின் தொடங்கினார். எடுத்துக்காட்டாக, சென்னை மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோமீட்டரிலிருந்து 426 சதுர கிலோமீட்டராகவும், கோயம்புத்தூரின் பரப்பளவு 115லிருந்து 265 சதுர கிலோமீட்டராகவும், மதுரையின் பரப்பளவு 49லிருந்து 151 சதுர கிலோமீட்டராகவும் அதிகரிக்கப்பட்டன. இந்த நடைமுறை, அனைத்து மாவட்டத் தலைமையகங்களிலும், ஓசூர் போன்ற பிற முக்கிய நகரங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.



கே.அசோக் வர்தன் ஷெட்டி
ஐ.ஏ.எஸ். (ஓய்வு)
ஒன்றிய அரசின் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்

**ஒரு சராசரி அமைச்சருக்கு இவற்றில் ஏதேனும் ஒரு சாதனையும் கூட மிகப் பெருமைக்குரிய சாதனையாக அமையும். திரு. ஸ்டாலின் அவர்கள் இந்த அனைத்து சாதனைகளுடன் மேலும் பல சாதனைகளைப் படைத்துள்ளார் என்பது உண்மையிலேயே குறிப்பிடத்தக்கதாகும். அவர் ஏதேனும் தவறிழைத்துள்ளார் என்று கருதுவதெனில் அது, 2006-11 காலகட்டத்தில் தான் மேற்கொண்ட சாதனைகள் குறித்து போதுமான விளம்பரம் செய்யாததே ஆகும்.**

ஒரு அரசியல் தலைவராக திரு. ஸ்டாலின் அவர்களைப் பற்றி நான் அதிகம் எழுத வேண்டியதில்லை. அவரது சாதனைகள் அதைப் பறைசாற்றும். கலைஞர் அவர்கள் 2018ஆம் ஆண்டில் மறைந்த பின்னர், திரு. ஸ்டாலின் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒற்றுமையைப் பேணி, கூட்டணியைத் தக்கவைத்து, இரு மக்களவைத் தேர்தல்கள், ஒரு சட்டப்பேரவைத் தேர்தல், ஒரு ஊராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் என நான்கு தேர்தல்களில் தொடர்ந்து வரலாறு காணாத வெற்றி பெற்றுள்ளார். அவர் மக்களிடையே புகழ் பெற்றவர்; கட்சித் தொண்டர்களால் கொண்டாடப்படுபவர்; கூட்டணிக் கட்சித் தலைவர்களால் பெரிதும் மதிக்கப்படுபவர்.

திரு.ஸ்டாலின் அவர்கள், 2021ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின், 2011ஆம் ஆண்டு தான் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்துள்ளார். அன்று, புரட்சிகரமான திட்டங்களே அவரது தனித்திறனாக இருந்தன. இன்றும் அவையே அவரின் பலமாகத் தொடர்கின்றன.

- **"விடியல் பயணம்" (அரசுப் பேருந்துகளில் மகளிருக்கான கட்டணமில்லா பயண வசதி)**
- **"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" (தகுதியான மகளிருக்கு மாத உதவித் தொகையாக ரூ. 1000 வழங்குதல்)**
- **"முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்" (அரசுப் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இலவச காலை உணவு வழங்குதல்)**
- **"புதுமைப் பெண் திட்டம்" (அரசுப் பள்ளியில் பயின்று பட்டப்படிப்பு பயிலுகின்ற மாணவியருக்கு உதவித்தொகையாக மாதம் ரூ. 1000 வழங்குதல்)**
- **"தமிழ்ப் புதல்வன் திட்டம்" ('புதுமைப் பெண்' திட்டம் போன்றே, மாணவர்களுக்கான அத்தகைய திட்டம்)**
- **"நான் முதல்வன் திட்டம்" (கல்லூரி மாணாக்கருக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம்)**
- **"மக்களைத் தேடி மருத்துவம்" (நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் ஏற்படாமல் தடுத்து, ஆரம்பக்காலத்திலேயே கண்டறிந்து, சிகிச்சையளிக்கும் வண்ணம் மக்களின் இல்லங்களுக்கே மருத்துவச் சேவையைக் கொண்டு சேர்க்கும் திட்டம்)**

இவை போன்ற முதன்மையான நலத் திட்டங்கள், மக்களின் சமூக, பொருளாதார நிலைகளில் நேர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தியதுடன், திரு ஸ்டாலின் அவர்களுக்குப் பெண்கள் மற்றும் இளைஞர்களிடையே ஈடில்லாப் புகழைப் பெற்றுத் தந்துள்ளன.

விமர்சிப்போர் அவற்றை 'இலவசங்கள்' என்று அழைக்கிறார்கள். ஆனால் திரு. ஸ்டாலின் அவற்றை 'மனித மூலதனத்திற்கான முதலீடுகள்' என்றும், 'வறுமையை ஒழிப்பதற்கான நலத்தொகைகள்' என்றும் கூறுகிறார். அவர், ஏழைகளுக்கு ஆதரவான, அனைவரையும் உள்ளடக்கிய முன்னேற்றம் என்பது 'வளர்ச்சி மாதிரியின்' ஒரு முக்கியமான அங்கம் என்றும் கருதுகிறார். இதனையே அவர் "திராவிட மாடல்" என்று குறிப்பிடுகிறார்.

நூறாண்டுகளுக்கும் மேலாக, நீதிக்கட்சிக் காலம் முதல், தமிழ்நாட்டில் அடுத்தடுத்து வந்த அரசுகள் சாதி, மத, ஆண், பெண், உயர்வு, தாழ்வு ஆகிய வேறுபாடுகள் இன்றி, அனைத்து மக்களின் மனித மூலதனத்தை மேம்படுத்துவதில் அதிக அக்கறை காட்டியுள்ளன. இதைச் சாதிப்பதற்குச் சமூக சீர்திருத்தங்கள் மற்றும் சமூக நீதியை வலியுறுத்தி, மக்களுக்கு கல்வியையும், சுகாதாரத்தையும் அளித்துள்ளன. இதன் விளைவாக, இன்று தமிழ்நாடு பெரும்பாலும் ஒவ்வொரு வளர்ச்சிக் குறியீட்டிலும், இந்தியாவின் முதல் 3 மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

முதன்முதலில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்ட பள்ளிக் குழந்தை களுக்கான மதிய உணவுத்திட்டம், இலவசப் பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்குதல் போன்ற முன்னோடித் திட்டங்கள், தொடக்கத்தில் மெத்தப் படித்தவர்களால் ஏளனம் செய்யப்பட்டன. இன்று இவை இந்த நாட்டில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின்பற்றப்படுகின்றன.

**ஜெர்மானிய தத்துவ அறிஞரான ஆர்தர் ஷாபன்ஹவுர் கூறியதைக் கவனியுங்கள்: "அனைத்து உண்மையும் மூன்று நிலைகளைக் கடந்து செல்கிறது. முதலாவதாக, அது ஏளனம் செய்யப்படுகிறது. இரண்டாவதாக, அது தீவிரமாக எதிர்க்கப்படுகிறது. மூன்றாவதாக, அது விளக்கம் தேவையில்லாமல் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது."**

**திரு.ஸ்டாலின் அவர்களின் புரட்சிகரமான முன்னோடித் திட்டங்கள் மீதான வரலாற்றுத் தீர்ப்பும் மேற்கண்டவாறே அமையும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.** ●